# தமிழ்நாடு பொறுப்பு டிஜிபி நியமனம்: உச்ச நீதிமன்றத்தில் பதிவான அவமதிப்பு வழக்கு! அடுத்து என்ன நடக்கும்? - venkatraman appointment as tamil nadu acting dgp henry thiben filed contempt case in supreme court

**tamil.samayam.com**/latest-news/state-news/venkatraman-appointment-as-tamil-nadu-acting-dgp-henry-thiben-filed-contempt-case-in-supreme-court/articleshow/123632506.cms

September 1, 2025



venkatraman acting dgp supreme court

தமிழ்நாட்டின் பொறுப்பு டிஜிபியாக வெங்கட்ராமன் நியமிக்கப்பட்டு உள்ளார். அவரது நியமனத்திற்கு எதிராக தற்போது உச்ச நீதிமன்றத்தில் அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கை சமூக ஆர்வலர் ஹென்றி திபேன் தொடர்ந்துள்ளார். மாநில டிஜிபி நியமனங்களில் பொறுப்பு என்ற பதவியை பயன்படுத்த கூடாது என எச்ச நீதிமன்றம் ஏற்கனவே ஒரு வழக்கில் உத்தரவிட்டு இருந்தது. எனினும் உச்ச நீதிமன்றத்தை அவமதிக்கும் விதமாக தமிழ்நாடு முதலமைச்சர் முக ஸ்டாலின், சங்கர் ஜிவால் பணி ஓய்வை தொடர்ந்து, பொறுப்பு டிஜிபியாக வெங்கட்ராமன் என்பவரை நியமித்துள்ளதாக பாஜக தலைவர் அண்ணாமலை, தவெக நிர்வாக அருண்ராஜ் உள்பட பலரும் குற்றம்சாட்டி இருந்தனர். இந்த நிலையில் பொறுப்பு டிஜிபி நியமனத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டுள்ளது. இதனால் பொறுப்பு டிஜிபி நியமனத்திற்கு தடை விதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டின் பொறுப்பு டிஜிபி ஆக வெங்கட்ராமன் நியமிக்கப்பட்டிருப்பது, தற்போது சட்டரீதியாக பெரிய சர்ச்சையை கிளப்பியுள்ளது. இந்த நியமனத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

## ஹென்றி திபேன் தாக்கல் செய்த வழக்கு

சமூக ஆர்வலர் ஹென்றி திபேன், வெங்கட்ராமன் நியமனத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் அவமதிப்பு மனுவை தாக்கல் செய்துள்ளார். அவரது மனுவில், மாநில டிஜிபி நியமனங்களில் "பொறுப்பு" என்ற இடைக்காலப் பதவியை பயன்படுத்தக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் ஏற்கனவே தெளிவாக உத்தரவிட்டிருந்தது குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த உத்தரவைக் கடந்து, தமிழக அரசு சட்டத்தை மீறும் வகையில் இந்த நியமனத்தை செய்துள்ளது என குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

## உச்ச நீதிமன்ற உத்தரவை மீறியதாக குற்றச்சாட்டு

முன்னதாக, டிஜிபி பதவி நியமனங்களைப் பற்றிய வழக்கில் உச்ச நீதிமன்றம் "முழுமையான தேர்வு செயல்முறையை பின்பற்றி, மூன்று பேர் பட்டியலில் இருந்து மூத்தவரை தேர்வு செய்ய வேண்டும். இடைக்காலமாக 'பொறுப்பு டிஜிபி' என ஒருவரை நியமிக்கும் நடைமுறையை தவிர்க்க வேண்டும்" என்று தெளிவாகத் தெரிவித்திருந்தது.

ஆனால், சமீபத்தில் ஓய்வு பெற்ற சங்கர் ஜிவால் அவர்களின் பணி நிறைவடைந்ததைத் தொடர்ந்து, தமிழக முதல்வர் முக. ஸ்டாலின் தலைமையிலான அரசு, வெங்கட்ராமனை "பொறுப்பு டிஜிபி" ஆக நியமித்தது. இதுவே உச்ச நீதிமன்ற உத்தரவை நேரடியாக மீறுவதாகவும், நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் எனவும் மனுவில் வாதிடப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து ஏற்கனவே பல்வேறு அரசியல் தலைவர்களும் கண்டனம் தெரிவித்திருந்தனர். பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை, "உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை மதிக்காமல், சட்டத்தை மீறி பொறுப்பு டிஜிபி நியமனம் செய்வது ஆட்சியின் பொறுப்பின்மையை காட்டுகிறது" என்று குற்றம்சாட்டினார். அதேபோல், தவெக நிர்வாகத் தலைவர் அருண்ராஜ் உள்ளிட்ட பலரும், இந்த நியமனத்தை கடுமையாக விமர்சித்தனர்.

## வெங்கட்ராமன் பதவி பறிக்கப்படுமா?

இப்போது, ஹென்றி திபேன் தாக்கல் செய்த அவமதிப்பு மனு விசாரணைக்கு வந்துள்ள நிலையில், இந்த நியமனத்திற்கு உச்ச நீதிமன்றம் தடை விதிக்கும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. காரணம், முன்பு பிறப்பித்த உத்தரவுகளை மீறிய வகையில் இந்த நியமனம் நடைபெற்றுள்ளதாக பல ஆதாரங்களும் சுட்டிக்காட்டுகின்றன. சட்ட வல்லுநர்களின் கருத்துப்படி, இந்த வழக்கில் நீதிமன்றம் கடுமையான நிலைப்பாடு எடுக்க வாய்ப்பு உள்ளது. நீதிமன்ற உத்தரவுகளை மீறி "பொறுப்பு" என்ற சொல்லை பயன்படுத்துவது, அரசின் சட்ட மதிப்பை கேள்விக்குள்ளாக்கும். எனவே, மாநில அரசுக்கு எதிராக கண்டன உத்தரவு கூட பிறக்கலாம் என சட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.